ஆக்கிரமிப்பு பணக்காரர்கள் நிலம் உள்ளவர்கள் செய்திருக்கிறார்கள் என்றால், அவர்களை அகற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து கொள்கிறது. ஆதிதிராவிடர்கள். பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள் நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்திருந்தால் அதிலே அரசாங்கம் கவனமாகவும் அனுதாபத்துடனும் பார்க்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1982—83—ல் திரைப்படத் துறையின் மூலம் தமிழக அரசுக்குக் கிடைத்த வருவாய்

82—*வினா எண் 18555 திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் திரைப்படத் துறையின் மூலம் 1982—83-ல் தமிழக அரசுக்கு கிடைக்கும் வருவாய் எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: ரூ. 35. 98 கோடி.

திரு. சி. சிவப்பிரகாசம்: தலைவர் அவர்களே, திரைப்படத் துறையின் வருவாய் விவரத்தை அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலேயும், குறிப்பாக சேலம் மாவட்டத்திலே எவ்வளவு வருவாய் கிடைத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். அந்த வருவாயைக் கொண்டு திரைப்படத் துறையை வளர்ப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்; தலைவர் அவர்களே, மாவட்ட வாரியாக எவ்வளவு வருவாய் என்ற கணக்கு இப்போது என்னிடத்திலே இல்லை. ஆனால் அந்த வருவாயைத் திரைப்படத்துறை வளர்ச்சிக்காக அரசு செலவு செய்வதில்லை. திரைப்படத் துறைத் தொழில் வியாபார நோக்கத்திலே செய்யக் கூடிய தொழில் ஆகும். வணிக நோக்கத்தோடு அந்தத் தொழிலை செய்யக் கூடியவர்கள் அதன் வளர்ச்சியில் ஈடுபட்டுக் கொள்வார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

திரு. ஜி. கே. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, இப்போது நகரப்புறங்களில் மாத்திரம் அல்லது கிராமப் புறங்களிலேயும் வீடியோ கேசட்டுகள் வைத்துக் கொண்டு அனுமதியில்லாமல் திரைப்படத் தியேட்டர்களில் கூட அவ்வளவு வரிசை கிடையாது. அந்த அளவிற்கு அதிகமாக வசூல் செய்து பால் உணர்வைத் தூண்டக்கூடிய நீலப் படங்களைக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் உரிமம் பெற்றத் திரைப்படக்காரர்கள், அரங்குக்காரர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே அப்படிப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

1984 பிப்ரவரி 20]

மாண்புமிகு திரு. எஸ். டி சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, வீடியோக்கள் போடுவதால் அனுமதிப் பெற்ற திரைப்பட அரங்குகளுக்கு வருவாய் குறைகிறது. அனுமதி பெற்ற திரைப்பட அரங்குதாரர்களுக்கு வருவாய் குறைகிறபோது அரசுடைய வருவாய் பாதிக்கும். அதை அரசு கவனமாக எடுத்துக் கொண்டு வீடியோக்கள் போடுவதை தடுத்து நிறுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சொன்னபடி அனுமதிக்கப்பட்ட திரைப்படங்கள் தணிக்கை செய்யப்பட்டு காட்டப்படுகிறது. தணிக்கை செய்தால்கூட அதிலே சில தவறுகள் வருகின்றன என்பதுதான் இந்த அரசினுடைய எண்ணம். தணிக்கையிலே அதிகமான சலுகைகள் கொடுக்கிறார்கள், அனுமதி இல்லாமல் போட்டால் எவ்வளவு மோசமாக இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது என்பதை அரசு ஏற்றுக் கொள்கிறது. அந்த வீடியோக்களை அரசு அனுமதிக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, திரைப்படத் துறையில் வரிவிதிப்பு முறையில் மாற்றம் செய்த காரணத்தினால் கூடுதலாக வருவாய் வந்திருக்கிறதா அல்லது குறைவாக வந்திருக்கிறதா? குறைந்திருந்தால் அதை நிவர்த்தி செய்வதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இந்த வரி விதிப்பினால் அரசுக்கு அதிகமாக வருவாய் வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1982—83 ஆம் ஆண்டு 4.85 கோடி ரூபாய் உபரியாக வந்திருக்கிறது. அப்படி உபரியாக வந்திருப்பதில் நடைமுறையில் 4.6 கோடி ரூபாய் இணக்கவரி அதிகமாக உள்ள இடங்களில் அதிகமாக வருவாய் வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: தலைவர் அவர்களே, வரிச் சீர்திருத்தம் என்ற முறையில் கம்பவுண்டிங் டாக்ஸ் மூலம் சினிமாக் கொட்டகைகள், தியேட்டர்கள் மூலமாக அதிகமான வருவாய் வந்திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிக்கிறார்கள். இந்த வரி விதிப்பு முறையை ஊராட்சிகள், ஒன்றியங்கள், கிராமப் புறங்களில் விஸ்தரித் திருக்கிறார்களா? அப்படி விஸ்தரிப்பதற்கு ஏதாவது எண்ணம் அரசுக்கு உண்டா?

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இணக்க முறை வரி செலக்ஷன் கிரேடு தேர்வு நிலை நகராட்சிகளுக்கும், முதல் கிரேடு, இரண்டாவது கிரேடு தேர்வு நிலை பஞ்சாயத்துகளுக்கும் இருக்கிறது. அதே போல் ஊராட்சிகளுக்கும் இருக்கிறது

என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்- மாநகராட்சிகளுக்கும், ஸ்பெசல் கிரேடுகளுக்கும் இன்னும் கொண்டு வரப்படவில்லை. மாநகராட்சிகளையும் ஸ்பெசல் கிரேடுகளையும் தவிர மற்ற எல்லா இடங்களிலும் இன்றைக்கு இணக்க முறை இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சினிமா தியேட்டர் உரிமையாளர்கள் உரிமங்களைப் புதுப்பிக்கின்ற போது அவர்களுக்கு பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. எலக்ட்டிரிகல் சர்ட்டிபிகேட், பி. டபுள்யூ. டீ. சர்ட்டிபிகேட் என்று ஒவ்வொரு சர்ட்டிபிகேட் வாங்குவதற்கும் அவர்களுக்கு சிரமம் ஏற்பட்டு அதனால் உரிமங்கள் பெறுவதற்கு காலதாமதம் ஏற்படுகிறது. இந்தக் காலதாமதத்தை போக்கும் வகையில் ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலும் இதற்கு என்று தனியாக ஒரு துறையை ஏற்படுத்தி அமுல் செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய உரிமங்களை புதுப்பிப்பதில் சங்கடம் எதுவும் ஏற்படவில்லை. அவர்கள் எப்படி எப்படி அந்த சினிமா தியேட்டர்களை வைக்க வேண்டுமோ அந்த விதிமுறைகளின்படி முறையாக வைத்தால் உரிமங்களைப் புதுப்பிப்பதில் எந்தவிதமான சங்கடமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இனாம் ஒழிப்புச் சட்டத்தை திருநெல்வேலி மாவட்டத்தில் அமல்படுத்தும் திட்டம்.

*83—வினா எண். 20622—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்:

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இனாம் ஒழிப்புச் சட்டம் திருநெல்வேலி மாவட்டத்தில் சில கிராமங்களில் அமுலாகவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விபரம் என்ன?

(இ) அமுலாக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்; (அ—இ) ஆம், திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் வட்டத்தில் இனாம் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் கட்டுக்குத்தகை பொட்டல் புதூர் மற்றும் இனாம் பொட்டல் புதூர் என்ற 2 இனாம் கிராமங்களில் மட்டும் நிலவரித் திட்டம் அமுலாக்கப்படவில்லை. மற்ற இடங்களில் எல்லாம் அமுலாக்கப்பட்டிருக்கிறது.

TRUTH ALONE TRIUMPHS